செ.வெ. 618

நாள் 30-07-08

# செய்திக் குறிப்பு

## நெடுஞ்சாலைத்துறை

துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, சாலை திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் சாலை மற்றும் பாலப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசின் சாதனைகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

- கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 4476 கோடி மதிப்பில் 31740 கி.மீ. நீள சாலை மேம்பாடு மற்றும் புதுப்பிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- இதுவரை இல்லாத வகையில் சாலை பராமரிப்பு பணிகளுக்கும் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. 2006–07 ஆம் ஆண்டில் ரூ. 801.37 கோடியும் 2007–08 ஆம் ஆண்டில் ரூ. 826.26 கோடியும் பராமரிப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- இதன் மூலம் போதிய நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலையின் ஓடுதளத்தை புதுப்பிக்க வேண்டும் என்ற இந்திய சாலை கழகத்தின் (IRC) நெறிமுறைகளின்படி தமிழ்நாட்டில் சாலைகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் புதுப்பித்து பராமரிக்கும் வாய்ப்பினை அரசு உருவாக்கியுள்ளது.

- சாலைகளில் போக்குவரத்து அளவிற்கேற்ப கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் மொத்தம் 6475 கி.மீ. நீள சாலைகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

- மாநில நெடுஞ்சாலைகளை குறைந்தபட்சம் இருவழி தடமாக மாற்ற வேண்டுமென இந்த அரசு முடிவு செய்தது. அதன் பேரில் கடந்த 2 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 1201 கோடி செலவில் 5748 கி.மீ. நீளச் சாலைகள் இருவழி மற்றும் இடைவழித்தடமாக அகலப்படுத்தப்பட்டுள்ளன.

- கிராமப் பகுதிகளில் பேருந்துகள் செல்லும் ஊராட்சி ஒன்றிய சாலைகளுள், கடந்த 2 ஆண்டுகளில் ரூ. 294 கோடி செலவில் 3012 கி.மீ நீள சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

- ஆதி திராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தினை இவ்வரசு முதன்முதலாக 2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. அதன் மூலம் கடந்த 2 ஆண்டுகளில் ரூ. 94.15 கோடி மதிப்பில் 700 கி.மீ. நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நபார்டு வங்கியின் கடனுதவித் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ.156 கோடி மதிப்பில் 1405 கி.மீ நீள இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் 105 ஆதி திராவிடர் குடியிருப்புகள் தார் சாலை வசதி பெற்றுள்ளன.

- உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மார்ச் 2006 வரை ரூ. 395 கோடி மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. கடந்த 2 ஆண்டுகளில் இத்திட்டத்தின் செயல்பாட்டினை துரிதப்படுத்தி மொத்தம் ரூ. 1085 கோடி செலவிடப்பட்டுள்ளது. சுணக்கமாக இருந்த நில எடுப்புப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு, தேவைப்படும் 393 ஹெக்டேர் நிலங்களுள் 380 ஹெக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மொத்தம் 742 கி.மீ. நீள சாலைப் பணிகளில் 380 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், ரூ. 277.78 கோடி மதிப்பில் 470 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 60 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு மிக முக்கிய கடலோர சாலையான பழையாறு–தரங்கம்பாடி சாலை மேம்பாடு உட்பட மொத்தம் 180 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 214 கோடி மதிப்பில் மொத்தம் 343 சிறு மற்றும் பெரிய பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- 2006–07ல் ரூ. 409.65 கோடி மதிப்பில் 25 இரயில் கடவுகளில் சாலை மேம்பாலங்கள் கட்டவும், 2007–08ல் ரூ. 876.70 கோடி மதிப்பில் 42 இரயில் கடவுகளில் சாலை மேம்பாலங்கள் கட்டவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2008–09ல் ரூ. 573 கோடி மதிப்பில் 23 இரயில் கடவுகளில் சாலை மேம்பாலங்கள் கட்டவும் ஒப்புதல் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

- கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 8 இரயில் கடவுகளில் ரூ. 89 கோடி செலவில் இரயில் மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- ரூ. 121.50 கோடி மதிப்பில் கரூர், தஞ்சாவூர், கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் முக்கிய ஆறுகளின் குறுக்கே 4 பெரிய பாலங்கள் கட்டுவதற்கும் அரசு ஒப்புதல் அளித்து பூர்வாங்கப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

- நெடுஞ்சாலைத்துறையின் அலுவலகங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ், 751 அலுவலகங்களுக்கு ரூ. 14.77 கோடி செலவில் மொத்தம் 1779 கணிப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், 2700 பணியாளர்களுக்கும் பொறியாளர்களுக்கும் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- துறையில் பல்வேறு பதவிகளில் காலியாகவிருந்த பணியிடங்களை நேரடி பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. 222 உதவிப் பொறியாளர்கள் நேரடி நியமனம் மூலமாகவும், 51 இளநிலைப் பொறியாளர்கள் பதவி உயர்வு மூலமாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- சாலைப் பணியாளர் பணியிடங்களை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு இதுவரை 158 நபர்களுக்கு பணி நியமனம் அளிக்கப்பட்டுள்ளது.

- ரூ. 3.85 கோடி மதிப்பில் 80 புதிய ஊர்திகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன. மேலும், 73 புதிய வாகனங்களை நடப்பு ஆண்டில் ரூ. 3.50 கோடி செலவில் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

- மாநிலம் முழுவதும் நெடுஞ்சாலை ஓரங்களில் 3,93,000 புதிய மரக்கன்றுகள் நடப்பட்டன.

- கடலூர் துறைமுகத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு சுமார் 10 ஆண்டு கால இடைவெளிக்குப் பின் கடந்த ஜனவரி 2008ல் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தின் மூலம் உரம் இறக்குமதி செய்து கொள்ள முன்வந்துள்ள மைய அரசின் பிரதிநிதி, துறைமுகத்தை பார்வையிட்டு துறைமுகத்திலுள்ள வசதிகள் குறித்து திருப்தி தெரிவித்துள்ளார்.

- கடலூர் தியாகவல்லி கிராமத்தில் அமையவுள்ள 1320 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்திற்கு தேவையான நிலக்கரியை கையாளுவதற்கு ரூ. 325 கோடி மதிப்பில் தோணித்துறை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி படகு துறையில் இயக்கப்பட்டு வந்த 30 ஆண்டு பழமையான படகுகளுக்கு பதிலாக எம்.எல். குகன் மற்றும் எம்.எல். பொதிகை என்ற 2 புதிய படகுகள் வாங்கப்பட்டுள்ளன. எம்.எல்.குகன் தற்போது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எம்.எல். பொதிகை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.